අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

OFFICE ON MISSING PERSONS

# வெற்றிடம்

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலமாகும்.

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்காக பொருத்தமான தகுதியுள்ள ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிராந்திய ஒருங்கிணைப்பாளர் (வெற்றிடம் - 01) MM 1-1

**பதவியின் விபரம்**: பிராந்திய அலுவலகத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை கவனித்தல் இதில் பிராந்திய அலுவலகத்தின் சுமூகமான மற்றும் வினைத்திறனான செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல், அத்துடன் தலைமை அலுவலகத்துடனும் துணை அலுவலகத்துடனும் ஒருங்கிணைந்து பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

**தகமைகள்**: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ மனித உரிமைகள/ முகாமைத்துவம் / நிர்வாகம் / மனித வள முகாமைத்துவம/ பொது முகாமைத்துவம் ஆகியவற்றில் பட்டம் பெற்றிருத்தல்.

மற்றும்

முதலாம் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இப்பதவிக்கு ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட (01) அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**: 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 91,690 - 10x2,480 - 15x3,450 - 168,240/- (முகாமைத்துவச்சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**அனைத்துப் பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்**

- ஒவ்வொரு விண்ணப்பதாரியும்
  - ✓ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ பதவிக்குரிய கடமைகளைச் நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - ✓ தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ கணினி அறிவு மற்றும் நிலைமாறுகால நீதி பற்றிய அறிவு கூடுதல் நன்மையாக இருக்கும்.
- தேவையான தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். ஏற்கனவே அரச அல்லது அரை அரச துறையில் பணியாற்றுபவர்கள், தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
- OMP இனால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தையே பூரணப்படுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் அனைவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- தகுதியான விண்ணப்பதாரிகள், பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை, சபையினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.
- இப்பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் பங்களிப்புச் செய்யப்படும்.
- ஆட்சேர்ப்புத்தொடர்பான இறுதிமுடிவை OMP இன் இயக்குனர் சபை மட்டுமே எடுக்கும், அது ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பான எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமையை கொண்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026 ஜீலை 5ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி **காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல. 40, 3வது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய** எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**